# பாவலனும் புரட்சியும்

***முனைவர் து. அசோகன்***
இணைப் பேராசிரியர்
அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783355

***ஆய்வுச் சுருக்கம்***

*ஆங்ககிலேயர்கள் நமது இந்திய நாட்டை அடிமை விலங்கு பூட்டி அவலத்தில் தள்ளியபோது வீறு கொண்டெருந்து சுதந்திர வேட்கையை கொண்டு சேர்த்தவன் பாரதி. அவன் படைப்புகளில் விடுதலை தாகம் மட்டும் இல்லாமல் இலக்கண இலக்கிய தாகமும் மருந்து காணப்பட்டது. அவன் பூட்டி வைக்கும் சிறைப்பறவை அல்ல. பீனிக்ஸ்பறவை. அவன் கவிதை ஆற்றால் பெண்கள் மனதில் இருந்த அடிமைசங்கலி உடைத்தெரிந்து பெண்ணடிமை போக்கிய பேரறிஞர். இக்கட்டுரையில், பாரதியின் தனித்தன்மையான கருத்துக்களும் பேராற்றலும் ஆராயப்பட்டுள்ளது.*

## முன்னுரை

*ஆங்கிலேயர் நமது இந்திய நாட்டை அடிமை விலங்கு பூட்டி அவலத்தில் தள்ளியபோது வீறு கொண்டெழுந்து சுதந்திர வேட்கையை மக்களிடத்தில் கொண்டு சேர்ந்தவன் பாரதி. புரட்சிக்காகவே பிறந்த புத்தொளி. அடிமை என்பதை ஒருபோதும் அங்கீகரிக்காதவன். ஏழ்மையில் இருந்தபோதும் இந்திய விடுதலைப் போராட்டக்களத்தில் ஒருபோதும் சுயத்தன்மையை இழக்காதவன். சாதிமதம் கூடாதென்றவன். பெண்ணடிமைப் போக்கிய பேரறிஞன். பாரதி மூடத்தை வேரறுத்த மூதறிஞர். தன் வாழ்நாள் முழுவதையும் மக்களுக்காக நாட்டுக்காக அர்பணித்த நாயகன். கவிதைகளின் சிகரமாகத் திகழ்ந்தவன். இத்தகைய பாரதியின் புரட்சியினைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.*

## பாரதியின் தந்தை சின்னசாமியின் புலமை

*பாரதியின் தந்தை சின்னச்சாமி எட்டையபுர மன்னன். அரண்மனையில் மிகச்சிறந்த வித்வானாக இருந்துவந்தார். அங்கிருந்த மற்றப் புலவர்களைவிட மிகுந்த திறமையுடன் விளங்கினார். அரண்மனையில் உள்ள பல புலவர்கள் தமிழ் மட்டுமே கற்றிருந்தனர். சிலர் வடமொழியில் தேர்ச்சிப் பெற்றிருந்தனர். ஆனால் சின்னச்சாமி அய்யர் தமி மட்டுமல்லாமல் கணிதம், எந்திரசாஸ்திரம், அலுவலக நிர்வாகம் போன்றவற்றில் சிறப்புற்றத் திகழ்ந்தார். ஆகையால் அவரிடம் அனைவரும் அன்போது பழகினர். நன்கு மதித்தனர். அன்றைய காலகட்டத்தில் தான் தமிழ் எழுத்துக்களின் பொன்னேடுகளில் ஒரு புதிய பக்கம் புரப்பட்டது. 1882-ல் டிசம்பர் 12-ல் லஷ்மிக்கும் சின்னசாமிக்கும் சுப்ரமணியன் என்ற பாரதி பிறந்தான்.*

## பாரதியின் கவித்திறன்

*சுப்பையாவிற்கு வயது ஏழு. எட்டையபுரத்தில் உள்ள பள்ளியில் படித்து வந்தான். சுப்பையாவின் தாத்தா இராமசாமி அய்யர் தான் அவனுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்தார். கற்றுக்கொடுக்கும் எதனையும் பசுமரத்தானி போல் சுப்பையா தன் மனத்தில் பதித்துக் கொள்வான். நூல்களை வாசிப்பதில் சிறந்து விளங்கினான். தமது தாத்தா கற்றுக் கொடுப்பதையும் தாண்டி நிறைய செய்திகளை அறிந்து வைத்திருந்தான்.*

*சிறிய கவிதைகளை சொந்தமாக இயற்றிப் பாடிக் காட்டினான். இதனைக் கண்ட சுப்பையாவின் தாத்தாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி.*

பின்நாளில் இவன் ஓர் மிகப்பெரிய கவிஞனாக வருவான் என்றார். ஆனால் பாரதியின் தந்தையோ வேண்டாம் அவன் கவிஞனாக வரவேண்டாம். நானும் தான் எழுதுகிறேன். என்ன பயன்? ஜமீன்தாருக்கு மனது குளிர பாடல் எழுதியே திறமையெல்லாம் வீணாகிறது. சுப்பையாவும் அப்படி அல்லல் படவேண்டுமா? என்றார். தன் மகனைக் கலெச்டராக்கிப் பார்க்கவேண்டும் என்பதே சின்னசாமி அய்யரின் பெருங்கனவாக இருந்தது. ஆனால் சுப்பையாவின் தாத்தா ராமசாமி அய்யரோ, உன் ஆசை தவறென்று சொல்ல மாட்டேன். ஆனால் அவனுக்குள் இயற்கையாகப் பொங்கியெழும் தமிழார்வத்தைப் பொசுக்க வேண்டாம். கவிதை அவனுக்குத் தானாக வந்த வரப்பிரசாதம். அவன் இரத்தத்திலேயே அது ஊறிப்போயிருக்கிறது. அதைச் சரியான வகையிலே திசை திருப்புவது நமது கடமை. அவனை அப்பப்போ அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டுபோ என்றார். பாரதியோ தன் தந்தைக்கு தெரியாமலே அரண்மனைக்குப் போவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான். எட்டு வயதிலேயே பெரிய புலவர்களைப் போல் அகத்துறைப் பாடல் பாடுவதில் வல்லவனாக இருந்தான். இவனின் இத்திறமைதான் மகாராஜாவுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. சுப்பையாவை அடிக்கடி அரண்மனைக்கு அழைத்து வாருங்கள் என்று மகாராஜாவே சொல்வாராம். பாரதியின் தந்தைக்கு இதுதான் பயமாகவும் வருத்தமாகவம் இருந்தது.

## பாரதியின் படிப்பும் பாவெழுதும் திறனும்

எட்டையபுரத்திலுள்ள நடுநிலைப்பள்ளியில் பாரதி படித்துக் கொண்டிருந்தான். ஆங்கிலத்திலும், கணிதத்திலும் அவன் மனம் நாட்டம் கொள்ளவே இல்லை. ஆசிரியர்கணிதம்கற்றுத்தரும்போது அவன் மனமோ கவிதையில் உலாப்போனது. விடைசொல்லுடா, என்று ஆசிரியர் கேள்வி கேட்டால் ‘படைவெல்லுடா’ என்ற எதுகையைத் தான் அவன்மனம் சிந்தித்தது. விடை கூற அவன் மனம் விழைந்ததே இல்லை என்பதே உண்மை.

கணிதமும் வரும். ஆனால் அவன் மனம் கொஞ்சமும் நாடவில்லை. ஆசிரியர் கணிதத்தில் பின்னம் என்று சொன்னால் பின்னம், கன்னம், அன்னம், சன்னம், முன்னம், சின்னம் என்று எதுகைச் சொற்களையே அவன் எண்ணம் எதிரொளித்தது. தெருக்கூத்துப் பார்ப்பதில் மிகுந்த விருப்பமுடையவனாக பாரதி இருந்தான். அதில் கலைஞர்கள் பாடுவதைக் கேட்பதில் அளவில்லாத ஈடுபாடு கொண்டு விளங்கினான். அவர்கள் பாடுகின்ற பாடல்கள் அனைத்து நாட்டுப்புற மெட்டுகளில் அமைந்தவை. அப்பாடல் மெட்டுக்கள் பாரதியின் ஆழ்மனத்தில் பதியமிட்டிருந்தன. மேலும் பெண்கள் உரலில் நெல்குத்திக் கொண்டே பாடும் வளைப்பாட்டு, தெம்மாங்குப்பாட்டு, காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, பண்டாரப்பாட்டு என பல்வேறு வகையான நாட்டுப்புற பாடல்களையும் பாரதி உணர்வோடு கேட்டான். மேலும் கோயில் கொடைகள் நடக்குமட்போது பாடப்படும் வில்லுப்பாட்டு, கணியன் கூத்து, உடுக்கைப்பாட்டு, கோலாட்டப் பாட்டு, ஒப்பாரி, இறந்தவர்களுக்காகப் பெண்கள் பாடும் மாரடிப்பாட்டு என்று கிராமியப் பாடல்கள் அனைத்தையும் கேட்டு ரசித்தான். இத்தகையப் பாடல்களைத் தன்மனத்தில் ஓடவிட்டே நாட்டுப்புற பாடல்களையும் எழுதினான். ஆனால் இப்படிப்பட்ட நாட்டுப்புற பாடல்கள் அந்நாளில் இலக்கியத் தரம் வாய்ந்ததாகக் கருதப்படவில்லை. ஆகையால் மன்னர் அவையில் பாரதி இவ்வாறான பாடல்களை எழுத விரும்பவில்லை. மாறாக வெண்பா, அகவலம், விருத்தம் போன்ற பாக்களில் பாடல்களை எழுதினான்.

## தமிழ்நூல்களைத் தேடித்தேடிப் படிக்கும் பாரதியின் தணியாததாகம்

பாரதியின் பாடல்கள் என்றாலே எட்டையபுர அரண்மனையில் உள்ளவர்கள் அதிக விருப்போடும் மகிழ்ச்சியோடும் கேட்டு ரசித்தனர். பாரதி தமிழ் நூல்களைத் தேடித்தேடிப் படித்தான். இப்படி பாரதி தமிழைத் தேடிப்போவதை அவனின் தந்தை விரும்பவில்லை. அவர்

*நினைத்ததெல்லாம் தன்மகன் ஆங்கிலத்தில் புலமைபெற்ற கலெக்டராக வேண்டுமென்பதே. ஆகையால் தன் தந்தைக்குத் தெரியாமல் பாரதியும் அவனது நண்பன் சோமுவும் பெருமாள் கோயில் வாகனங்களுக்குப் பின்னால் யாருக்கும் தெரியாமல் அமர்ந்துகொண்டு தமிழ்புத்தகங்களை படித்தனர். புத்தகத்தை காணாமல் சின்னசாமி அய்யர் சுப்பையாவைத் தேடியலைந்தார். பின்னர் பெருமாள் கோயில் வாகனங்களுக்கு இடையில் அவர்கள் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டு பிடித்து வீட்டிற்கு இழுத்துக் கொண்டு வருவார். இவனின் தொல்லைத் தாங்காமல் பாரதியை ஜமீன்தாரிடம் அழைத்துச்சென்று கண்டிக்கும்படியும் புத்திமதி சொல்லுங்கள் என்றும் கூறினார்.*

*ஜமீன்தார் சிரித்துவிட்டு, அய்யரே உமக்குத் தான் புத்திமதி சொல்ல வேண்டு. சுப்பையா இந்த அகவையில் பாடியிருக்கும் கவிதைகளை நீர் கேட்டதுண்டா, அவன் பிறவிக் கவிஞன். செறிந்து பளபளக்கும் முத்து. தேடாமல் நாம் பெற்ற சொத்து. தினமும் மாலையில் அவனை இங்கே அனுப்பி வையும் என்றார். இதற்கு ஜமீனிடம் வராமலே இருந்திருக்கலாம் என தன்னையே நொந்துகொண்டார் அய்யர்.*

*சுப்பையா எட்டையபுர சமஸ்தானத்தில் பாடிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த அவையினரும் ஜமீன்தாரும் அவனது பதினோராமல் வயதில் ' பாரதி' என்ற பட்டத்தை சூட்டினார்கள் என்பது எண்ணத்தக்கது.*

**இலக்கியக் கூட்டங்களில் பாரதி**

*அந்நாளில் திருநெல்வேலி மாவட்டம் இலக்கியத்தின் நிகழ்விடமாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு ஊரிலும் அறிஞர்கள் கூடிக் கலந்துரையாடும் இலக்கியக்கழகங்கள் இயங்கிவந்தன. சில பெரியவர்கள் முக்கியமானவர் வீடுகளில் குறிப்பிட்ட நாட்களில் தமிழறிஞர்கள் கூடுவதுண்டு. ஒருநாள் சோணாசலம் பிள்ளை வீட்டில் மாலைப்பொழுதில் ஓர் இலக்கியக் கூட்டம் நடந்தது. அதில் ஈற்றடி மட்டும் கொடுத்து பாடல்கள் இயற்றும் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அக்கூட்டத்தில் பாரதியும் கலந்துகொண்டான்.*

*அங்கிருந்த காந்திமதி நாதப்பிள்ளை பாரதியைப் பார்த்து, 'பாரதி சின்னப்பயல்' என ஈற்றடி கொடுதித்து வெண்பா இயற்றச் சொன்னார். எல்லோரும் பாரதி சின்னப்பயல் என்றுகூடப் பார்க்காமல் ஓர் எதிர்ப்பார்ப்புடனும் ஆவலோடும் பாரதியைப் பார்த்தனர். பாவம் சிறிய பையனாயிற்றே. இப்படி வதைக்கிறானே என நல்லோர் சிலர் வருந்தினர். பாரதியோ கொஞ்சமும் சளைக்காமல் வருத்தப்படாமல் கூர்ந்த மதியோடும், தைரியத்தோடும் தான் இயற்றிய வெண்பாவைக் கூறினான்.*

> ***ஆண்டில் இளையவனான் றந்தோ அகந்தையினால்***
> ***ஈண்டிங் கிகழ்ந்தென்னை ஏளனஞ்செய் - மாண்பற்ற***
> ***காரிருள் போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்***
> ***பாரதி சின்னப் பயல்***

*என்றான்.*

*இவ்வெண்பாவின் உட்பொருளை அறிந்த சிலர் பேஷ் பேஷ் சபாஷ் என்றெல்லாம் பாராட்டினர். இன்னும் சிலருக்கு பொருள் புரியதேவ நேரமானது. பாரதியோ, தான் என்ன கருத்தைச் சொல்கிறார் என்பதை நன்கு விளக்கித் தெளிவாக்க வேண்டும் என்பதற்காக, காந்திமதிநாதனைப் பார் அதி சின்னப்பயல் என்று பிரித்துக் கூறினான். உடனே பாரதியின் திறமையைப் பாராட்டி நண்பர்கள் அவையில் கட்டித்தழுவி கைகுலுக்கினார். காந்திமதி நாதனுக்கோ வெட்கமாயிற்று. காந்திமதிநாதனின் தந்தை சோணாசலப்பிள்ளை தன் மகனை இகழ்ந்து பாடிய பாடல் என்பதையும் மறந்து பாரதியைப் பாராட்டினார். காந்திமதி நாதன் பொறாமையுணர்வு உள்ளவனாக இருந்தாலும் நல்ல தமிழ்ப்புலவர் என்பதை பாரதி நன்கு அறிந்திருந்தான். ஆகையால் அவனை மகிழ்விக்க வேண்டும் என விரும்பி தான் எழுதிய வெண்பாவை சற்று மாற்றி,*

> ***ஆண்டில் இளையவனென் றைய அருமையினால்***
> ***ஈண்டிற்றென் றன்னை நீ ஏந்தினையால் - மாண்புற்ற***
> ***காரதுபோல் உள்ளத்தான் காந்திமதி நாதற்குப்***
> ***பாரதி சின்னப்பயல்***

*என்று பாடினான்.*

அவையில் மகிழ்ச்சி பொங்கியது. பாரதியின் கவியாற்றலை எண்ணி எண்ணி அவையோர் வியந்தனர்.

பால்ய மனமும் பக்குவ மனமும்

பாரதிக்கும் செல்லமாவுக்கும் பால்ய விவாகம் செய்துவைத்தனர். திருமணம் முடிந்த பிறகுதான் பாரதி சில நிகழ்வுகளை நிதானமாகவும் தீர்க்கமாகவும் சிந்தித்துப் பார்த்தான். அவன் வாழ்வில் நடந்த திருமணமும், சடங்குகளும், விருப்பமில்லாத தன் ஆங்கிலக் கல்வியும் ஓர் விளையாட்டுப் போல் தோன்றியது. தனகு ஒன்றும் அறியாத வயதில் தன் தந்தை ஏன் திருமணம் செய்து வைத்தார். பாதகங்களிலேயே பெரும் பாதகம் குழந்தைத் திருமணம் தான் என கருதினான். தனது தந்தை சின்னசாமி அய்யரின் மேல் கோபமும் வெறுப்பும் கொப்பளித்தது. திருமணம் முடிந்தவுடன் செல்லம்மா அவள் வீட்டில் தங்கிவிட்டாள். பாரதியோ பள்ளிக்குச் சென்று விட்டான். திருமணமும் படிப்பும் பாரதிக்கு மிகுந்த மன உளைச்சலையே கொடுத்தது.

## பிடிக்காத ஆங்கிலம்

பாதியின் தந்தை சின்னசாமி அய்யர் பாரதி உயர்கல்வி கற்கவேண்டும். அதுவும் ஆங்கிலமாக இருக்க வேண்டும் என தான் விரும்பியது போலவே ஆங்கிலம் பயில்வதற்கு சேர்த்தார்.

ஆங்கிலேயர்க்குக் கைகட்டிக் குற்றேவல்புரிகிற சேவகர்கள், அடிமைகள், இந்தியர்களாக இருந்தும் ஆங்கிலத் துறைகளுக்காக வேவு பார்க்கிற ஒற்றர்கள் வயிற்றை மட்டுமே பெரிதாகக் கருதி தம் உயிரை விற்றிடு' பேடிகள், வஞ்ம் புரிவோர் ஆகியோர் படிக்கின்ற ஆங்கிலக் கல்வியை மானமுற்ற தன்னையம் தந் தந்தை படிக்க வைத்துவிட்டாலே என்று பாரதிக்கு தீரா வருத்தம் ஏற்பட்டது. சிங்கத்துக்குப் புல்லை உண்ணச் சொல்லி கொடுத்ததுபோல தன்னை ஆங்கிலக்கல்வி படிக்க வைத்து விட்டார் என வெதும்பினான். வேறு வழியில்லாமல் படித்து ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த வித்வானாகவும் பாரதி விளங்கினான்.

## பாவலனும் புரட்சியும்

ஜமீன்தார் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குதிரைச்சவாரி செய்து ஊரை பவனிவருவதுண்டு. குதிரைச்சவாரி சரிபடாதபோது பல்லக்கில் ஜமீன்தாரை தூக்கி வருவார்கள். ஆண்கள் வீட்டுவாசலில் நின்று ஜமீன்தாருக்கு மரியாதை செய்ய வேண்டும். ஜமீன்தார் ஊர்வலம் வருகின்றார் என்றால் ஊரில் உள்ள பெண்கள் அனைவரும் கதவுக்குப் பின்னால் ஒளிந்துகொள்வார்கள். யார் யார் ஜமீன்தாரை வணங்கவில்லை என்று குறித்து வைத்துக் கொள்வார்கள்.

ஒருமுறை எட்டையபுர ஜமீன் ஊர்வலம் வரும்போது பாரதி தன் நண்பர்களுடன் ஷெல்லியின் கவிதைகள் பற்றி பேசிக் கொண்டிருந்தான். ஜமீன்தார் வணுருவதற்கு அடையாளமாக 'வாங்கா" என்கிற ஊதுகுழல் ஊதப்பட்டது. ஊர் சிறியதுதான். ஆனால் மன்னரின் பவனியோ அமர்க்களப்படும். அன்று மன்னர் ஊர்வலம் வந்தது பாரதி, எட்டையபுரம் சோதி வித்வானும் பாரதியின் நண்பருமான குருகுகதாசபிள்ளையின் வீட்டுத் திண்ணையில் ஷெலலி கவிதைகளைப் பற்றி நண்பர்களுக்கு விளக்கிக் கூறிக்கொண்டிருந்தான். அப்பொழுத 'வாங்கா' சத்தம் கேட்டது. மற்றெல்லோரும் எழுந்து நின்றார்கள். பாரதியையும் எழுந்திருக்கச் சொன்னார்கள். ஆனால் பாரதி எழுந்திருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் இது முட்டாள் தனத்தின் பிரகடனம் (Proclamations of Stupidity) என்று கூறினார்.

## புரட்சி-2

திருநெல்வேலியிலிருந்து மக்களை ஈர்க்கும் ஜனரஞ்சகமான செய்திகளைச் சுமந்து 'சர்வாசனமித்திரன்' எனப்படும் பத்திரிகை

*ஒன்று வெளிவந்து கொண்டிருந்தது. அதன் ஆசிரியர் எஸ்.வேதமூர்த்தி முதலியார். அப்பொழுது இலக்கிய வட்டத்தில் ஓரளவு புகழுடன் விளங்கிய பாரதியை ஒரு கட்டுரை எழுதிக்கொடுக்கும்படி வேண்டினார். செல்வந்தர்களின் தன்மையையும் சில பணக்காரர்கள் செய்யும் அநீதிகளையும் பற்றி எந்தப் பெயரையும் குறிப்பிடாமல் சுவையான ஒரு கட்டுரை எழுதிக் கொடுத்தார் பாரதி. அது பிரசுகரிக்கப்பட்டது. பாரதியின்மேல் பொறாமை கொண்ட சிலர் அக்கட்டுரையை எட்டையபுரம் ஜமீன்தாரிடம் காட்டினார். பாரதி மறைமுகமாக தன்னைப் பற்றித்தான் அக்கட்டுரையில் எழுதியிருப்பதாக ஜமீன் நினைத்தார். அத்தோடு புரொக்லமேஷன் ஆஃப் ஸ்டுபிடட்டி என்று பாரதி சொன்னதை எவரோ ஜமீன்தார் காதில் ஓதிவிட்டனர். விளைவு எட்டையபுர சமஸ்தானத்திலிருந்து பாரதிக்கு அளிக்கப்பட்டு வந்த உதவிகள் நிறுத்தப்பட்டன. அவரை வேலையிலிருந்து நீக்கிவட்டதாக செய்திகள் வந்தன.*

**முடிவுரை**

*இவ்வாறு பாரதி தன் இளமைப்பருவம் முதல் சிந்தனைச் சுடராகி, தான் வளர்ந்த பின்னும் எவறுக்கும் அஞ்சாமல் நாடு, இனம், மொழிக்காக தன்னையே அர்ப்பணித்த மிகப்பெரிய புரட்சியாளனாகத் திகழ்ந்தான் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.*

**துணைநூற்பட்டியல்**


1. *ஷெல்லியும் பாரதியாரும் - சென்னை.*
2. *பாரதியார் கவிதைகள், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.*
3. *பெ.தூரன், பாரதியாரும் தமிழகம், வானதி பதிப்பகம், சென்னை.*
4. *ஏ. இராமசாமி, பாரதியாரும் பண்டைத் தமிழும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.*